முருகப்பெருமான் துணை

**மகான் மூர்க்க நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**04.06.2021**, வெள்ளிக்கிழமை

1. மனமதை ஒடுக்கி மக்களும்
மாயை வென்று சிறந்திட
ஞானமதை அருளும் அரங்கனே
ஞானியே உன் பெருமைகூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
குறைவிலா பிலவ விடைதிங்கள்
இருபானோர்திகதி புகரோன் வாரம்
(பிலவ வருடம் வைகாசி மாதம் 21ம் நாள், 04.06.2021, வெள்ளிக்கிழமை)
இயம்பிடுவேன் மூர்க்க நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான நிலை மக்களடைய
ஞான யுகமாற்றம் செய்வேனென
ஞானபண்டிதன் வடிவாக வந்தஞானி
4. ஞானி ஆறுமுக அரங்கனின்
நன்னெறிகளை ஏற்று நன்கு
ஞானிகளின் பூசை கலந்து
நாமசெபம் போற்றி வந்து
5. வந்துவே மாதவசி கரம்பட
வரமாக தீட்சை பெற்று
முந்தை பிறவித் தொடர்பாக
முழுமை ஞானம் ஏற்றுவர
6. வருகவே மனித மனநிலை
வாஞ்சைபட தயவு குன்றாதபடி
தரும சிந்தையும் புலன்அடக்கவும்
தவறிழைக்கா வாழ்வு நெறிபட
7. நெறிவுபட மற்றவர்க்கு உதவும்
நீதிமான்களை உலக மக்கள்
ஆறுமுக அரங்கன் பார்வைபட
அனைத்திலும் சிறந்து விளங்குவர்
8. விளங்கிட வினைகள் சூழா
விந்தைபட ஞானிகள் ஆசிகூட
கலங்கமிலா ஞானவான்களாகி
கலியிலும் அரங்கன் தேடிடும்
9. தேடிடும் தேற்றிடும் ஞானிகளாகி
திருவருள்பட நிலை பெறுவர்
நாடிய உலகப் பேரிடராம்
நச்சுக்கிருமியையும் நமனையும் வெல்வர்

10. வெல்வர் ஞானிகள் துணைபட
வீழ்த்துவர் சகல இடர்களையும்
ஆள்பவரும் ஞானிகள் வழியை
அபயமென நம்பி சரணடைய

11. சரணடைய ஆளுமை தனக்கு
சர்வ பாதுகாப்பும் கூடியே
சரவணப் பெருமானால் உயர்வுகாணும்
சாற்றிய யோகபிரசன்ன ஆசிமுற்றே

—சுபம்—